சி.சி.எண்.151/2019
PW1 – சங்கிலிகருப்பசாமி
நாள் – 08.01.2025.

**எதிரி ஆஜர் இல்லை.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிரி சீனிவாசன் 2012 லிருந்து 2020 வரை கொரோனா லாக்டவுண் முன்பு வரை ரியல்எஸ்டேட் தொழில் தான் செய்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதே காலகட்டத்தில் நானும், திருத்தங்கலை சேர்ந்த சீமைச்சாமி என்பவரும் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. சீமைச்சாமி என்பவரை யார் என்று எனக்கு தெரியாது. நானும் சீமைச்சாமி என்பவரும் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்தோம் என்றும், தற்போது உண்மை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீமைச்சாமி என்பவரிடம் வழக்கின் எதிரியான சீனிவாசன் அளித்த காசோலையை சீனிவாசனிடம் சீமைச்சாமி ஒப்படைக்கும் சமயத்தில், அதை நான் அவரிடம் ஒப்படைத்துவிடுவதாக கூறி பெற்றுக்கொண்டு, அதனை வைத்து எதிரிக்கு எதிராக பொய்யாக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரி எந்த சூழ்நிலையிலும் என்னிடத்தில் கடன் வாங்கவில்லை என்றும், எதிரி என்னிடம் எந்த காசோலை கொடுக்கவில்லை என்றும், எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எவ்வித சட்டப்படியான தொகையை கொடுப்பதற்கு கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.